Registered as a News Paper in Ceylon
P. M. G- No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ௵ (1889) ஆவணி ௨௮உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-௬௯] யாழ்ப்பாணம்:- ஏவிளம்பி௵ ஐப்பசி௴ ௨௩ உ வெள்ளிக்கிழமை (8 NOVE. 1957) [இல-௩௧]

# தாமுணராதார் பிறர்க்குண்மை உணர்த்துவதெங்ஙனம்?

—————o—————

## உண்மையற்றநெறியில் ஒழுகுவதால் இன்னல்கள் மக்களுக்கு மலிந்துள்ளன

வாழ்க்கையென்பது ஒரு பெரும் புயலிற்குச் சமானமாகும். வாழ்க்கையில் மேடு பள்ளங்களும் கஷ்டநிலைகளும் வருவது இயற்கை நியதி. சகிக்க முடியாத அளப்பரிய கஷ்டங்கள்தான் திரண்டு வந்து தாக்கினும் அவையனைத்தும் இறைவனை நாமணுகுவதற்கு ஏற்பட்ட அருட்செயலாக நாம் எண்ண வேண்டும். அப்படி எண்ணுவதே நல்லறிவாளர்களின் செயலாகும். நேர்மை, உண்மை, வாய்மை, சத்தியம் ஆகிய இவைகளை வாழ்க்கையின் இலட்சியங்களாகக் கைக்கொண்டு நடப்பவர்கட்கு இவ்வுலக வாழ்க்கையில் சகித்தற்கரிய இன்னல்கள் வந்தடைகின்றன. இவர்கள் உலகத்திலுள்ள இழிந்த காமக்குரோதாதிகளின் தாக்குதலுக் குட்பட்டவர்களால் நேரத்திற்கு நேரம் தாக்கப்பட்டே வருகின்றனர். மக்கட் குலத்திற்கு எவரொருவர் உண்மை உணர்ந்து நன்மை புரிகிறாரோ அவர் பெறும் பிரதிபலன் ஏச்சும் பேச்சுந்தான். இழிந்த பண்புகளால் நிரம்பியவர்களும், சுயநலத்தையே பெரிதும் குறிக்கோளாகக் கொண்டு நடப்பவர்களுமே இன்றைய மக்கட் சமுதாயத்தில் மலிந்துள்ளனர். எத்தனை இன்னல்கள்தான் அலைக்குமேலலையாக வந்து தாக்கினும் உண்மையை யுணர்ந்து நற்காரியங்களைச் செய்வதில் ஒருவரும் பின்வாங்கக்கூடாது. சத்தியமே வெல்லும். உண்மையே நிலைநிற்கும் என்பது ஆசைகளாலலைப்புண்டு தத்தளிக்கும் கயவர்களால் கண்டறிவது இயலாது. ஆகையால் உண்மைக்கு உழைக்கும் உத்தமர்கள் பொறுமையைக் கடைப்பிடித்துச் சாந்தமான வழியிற் சென்று அகிம்சையைப் போற்றி நடக்க வேண்டும். இன்று மக்கள் உண்மையற்ற வழியில்நடக்கின்றனர். அதனுல் மக்கள் வாழ்க்கை அல்லலுறுகின்றது. இறுதியில் மக்கட் பிறவியின் பயனையுமடைய முடியாமற் போய்விடும். உண்ண உணவும் உடுக்க உடையும், சுகமான வாழ்க்கைக்குரிய சௌகரியங்களும் இருந்தால் மக்கள் வாழ்வு போதுமானது என்று அநேகர் எண்ணுகின்றனர். அவர்களால் மக்கட் சமுதாயத்திற்கு ஒருவிதநன்மையுமுண்டாகாது. அவர்கள் இன்னல்களை அநுபவித்தறியாதவர்களானபடியால் மற்றவர்களின் தன்மைகளை உள்ளவாறு உணர முடியாது. அதனுல் உண்மையுணர்ச்சி யுதிக்க இடம் ஏற்படாது. உண்மை உணர்ச்சியின்றேல் உண்மைகளைச் சரிவரக் கண்டறிந்து உலகிற்குணர்த்தவோ அல்லது உண்மை வழியில் நின்று சரிவரத் தொண்டாற்றவோ முடியாது.

சன்மார்க்கர்கட்கே உண்மை புலப்படுமன்றி சன்மார்க்கமற்றவர்கட்கு உண்மை புலப்படுவதெங்ஙனம்? இதனுலேயே இலட்சியவாதிகட்கும், உத்தமர்கட்கும், சன்மார்க்கர்கட்கும் அறிவிலிகளால் வாழ்க்கையில் சகித்தற்கரிய இன்னல்களுண்டாகின்றன. எத்தனை இன்னல்கள் வரினும், உத்தமர் அவைகட்குத் தலைவணங்கார்கள். ஆரம்பத்தில் உண்மை தோல்வியடையினும் இறுதி வெற்றியதற்கே. உண்மை உத்தமர்க்குப் புலப்படுமேயன்றி ஏனையோர் கண்டறிவது மிகவும் கடினம். உண்மைவழிக் கண்டறிந்து அதன்வழிச் சென்று வாழ்க்கையைவளப்படுத்துவதே மக்கள் வாழ்க்கையின் இலட்சியமாக அமைய வேண்டும்.

செல்வி த. மாலோகமணி
கரவெட்டி

---

அரசியல் அலை

# செயற்கைச் சந்திரன், -சீவனுள்ள நாய்

————:0:————

## பக்கத்தில் இருப்பதனுற் பார்த்துக் குரைக்க முடியாது

### அரசியல் ஆகாயத்தில் - - அதிசய மாற்றங்களா?

சந்திரனைப் பார்த்துச் சுணங்கன் குரைத்த காலம் போய் இருவரும் பரஸ்பர நட்புரிமை பூண்டு ஒரு பீடத்தில் அமர்ந்துலாவும் காலம் பிறந்துவிட்டது. உருசியர்கள் 'சந்திரன்' செய்யும் தந்திரத்திற் பரிசுபெறும் திறமையைப் பெற்றுவிட்டார்கள். அமெரிக்கர் இனிச் செயற்கைச் சந்திரனைத் தயாரித்து வினைகெடுத்தாது அந்த உண்மைச் சந்திரனை இந்த உலகுக்கு வரச்செய்வதற்குரிய விஞ்ஞான அதிசயத்தைக் கண்டு பிடிப்பதே புத்தியென்று சிலர் வேடிக்கையாகப் பேசுகிறார்கள்.

நாயினுங் கடையேன் என்று இழிவுபடுத்தும் எல்லைக்கு உதாரணமாகக் கூறப்படுவதுண்டு. ஆனல் அந்த கடையாய பிறவியே இன்று ஆறறிவு படைத்த மானிடர்களுக்கு முன் வானுக்கப்பாற் சென்றும் உயிராபத்து நிகழா[illegible]யில் ஆற்றலைக்[illegible] கூடியதாயிருக்கின்றது.

செம்படைப் பெருமை வாய்ந்த உருசிய தேசம் உயிர்ச்சேதத்தை இம்மியளவும் கவனிக்கமாட்டாது திடநெஞ்சம் கொண்ட[illegible]. ஆனல் ஆறறிவு படைத்த மனிதனைச் செயற்கைச் சந்திரனுக்குள் வைத்து விஞ்ஞான வேடிக்கை பார்க்காது சமதருமத்துக்கு மாருக வாய்விடாச் சாதியென்று சொல்லும் நாய்வர்க்கத்திலே கை வைத்தது கோழைத்தனம் என்று சிலர் சொல்லுகின்றனர்.

அரசியல் ஆகாயத்தில் அதிசயங்கள் விளைந்தவண்ணமாயிருக்கின்றன. அமெரிக்காவும உருசியாவும் தரைச் சண்டை கடற்சண்டை ஆகாயச் சண்டை எல்லாம் விட்டு அதற்கப்பாலும் சண்டையிடுவதற்குப் போட்டி போடுவது உலக நன்மைக்கே. ஏன்! இவ் விரு நாடுகளும் மேலுலகத்திலே இடம் மாறி வீற்றிருந்தால் ஏனைய நாடுகள் இங்கு அமைதியாய் வாழ முடியுமல்லவா?

இதுவே சமதருமம்; இதுவே சம உலகம்.

---

### நிலமில்லாத தமிழ்மக்களுக்கு நிலம்

சொந்தநிலமில்லாததமிழ் மக்களைக் குடியேற்றத் திட்டங்களில் இடம்பெற முன்வருமாறு தூண்டி நிலம் பெறுதற்கு வேண்டிய துணைபுரியும் இயக்கமொன்று தமிழரசுக் கட்சியின் ஆதரவில் வைத்திய கலாநிதி வி. கே. பரமநாயகம் அவர்கள் தலைமையில் நடைபெறுகின்றதாம்.

### ஐக்கிய நாட்டுச் சபையில் தென் ஆபிரிக்கா

உலகிலுள்ள முப்பது நாடுகள் சேர்ந்து தென் ஆபிரிக்க நிறக் கொள்கையைக் கண்டிக்கும் பிரேரணை ஒன்றை ஐக்கியநாட்டு அரசியற்சபையிற்கொண்டு வந்தன. ஐந்து நாடுகள் எதிர்க்க, பத்து நாடுகள் இடையில் நிற்க, 59 நாடுகள் சாதகமாக வாக்களித்துப் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

### விவேகானந்த சபையின் வளர்ச்சி

கொழும்புவிவேகானந்த சபை, பருப்பிக்கப்பட வேண்டியதேவை ஏற்பட்டுள்ளமையால்இப்பொழுது மேட்டுத்தெருவிலுள்ளநிலையத்துக்கும் புதுச்செட்டித் தெருவுக்குமிடையிலுள்ள ஓர் காணியை வாங்குதற்குச் சபையார் தீர்மானித்துள்ளனராம். இதை வாங்கினல் நிலையம் மேட்டுத் தெருவிலிருந்து புதுச்செட்டித்தெரு வரையும் பரந்து விளங்கும். காணியின் விலையே ரூபா எண்பதினுயிரமாம்.

### சந்திரனுக்குச் செல்லுதல் சாத்தியமாயிற்றும்

உருசியாவின் இரண்டாம் இயற்கைச் சந்திரன் வானவெளியிற் சென்றதைப் பின்தொடர்ந்து மற்றொரு விசேட செய்தியை வெளியிட்டிருக்கின்றார் ஓர் உருசிய விஞ்ஞானி. சந்திரனுக்குச் சென்று பத்து நாட்களில் திரும்புதல் சாத்தியமாகிறதென்று அவர் தெளிவாகக் கூறுகிறார்.

### பால் குடிப்பது பற்றி வைத்தியர் கருத்து

சுக வாழ்வுக்குப் பால் குடிக்கவேண்டியது அவசியம் என்பது பொதுவான கருத்து. ஆனல் முதிர்ந்த வயசினர் பால் குடிப்பது இயற்கைக்கு விரோதமானதென்றும் அதிகமாகப் பால் குடிப்பதாற் குடல் நோய் முதலியவை உண்டாகுமென்றும் நியூசிலந்திலுள்ள மூன்று வைத்தியர்கள் அறிவுரை கூறியிருக்கின்றனர்.

### பொது எழுத்தாளர் பரீட்சை

—0—

அரசாங்க பொது எழுத்தாளர், புகையிரதம், தபாற்கந்தோர், சுங்கம் ஆகியவற்றின் எழுத்தாளர் ஆகியோருடன் புகையிரத அதிபர் உதவி அதிபர்கள் பரீட்சை 21-2-58 தொடக்கம் கொழும்பு முதலிய இடங்களில் நடைபெறும். ஆண்கள் மாத்திரம் இடம்பெறுவர். விண்ணப்பப் பத்திரங்கள் 25-11-57க்கு முன் பரீட்சாதிகாரியையடைதல் வேண்டும். 2-11-57-ல் வெளிவந்த அரசாங்கப்பத்திரிகையில் விபரம் காணலாம்.

### ஆயுள்வேத வைத்தியருக்குச் சம அந்தஸ்து

இப்பொழுதுள்ள அரசாங்க வைத்திய (மேல்நாட்டு வைத்தியம்) ஆட்சிப்பகுதி போன்றது ஒன்றை ஆயுள்வேத வைத்தியத்துக்கும் அமைக்கச் சுகாதார மந்திரி தீர்மானித்துள்ளார். வைத்திய சபை, கல்லூரிச் சபை முதலியவையும் அமைக்கப்படும். புதிய ஒழுங்கின்படி மேல்நாட்டு வைத்தியருடன் சம அந்தஸ்துடையவர்களாக ஆயுள்வேதவைத்தியர்மதிக்கப்படுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்கஅந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

ஏவிளம்பி ஹூ ஐப்பசி மீ
உங உ வெள்ளிக்கிழமை


## ஆராய்வது யார்?

சுவைபெறச் சொற்பெருக்குவதையே அணியாகக் கொண்டிருக்கும் முதல் அமைச்சர் இந்நாட்டுக்குக் குடியரசு முறை அரசியற்றிட்டம் வகுப்பதற்கு வழிவகை தேடுவதை விரும்புகின்றாராம். மக்கள் ஐக்கிய முன்னணி அரசு நடத்தத் தொடங்கித் திங்கள் பல ஆய்விட்டன. பேச்சளவிலே திட்டங்களும் பல கொண்டுவரப்பெற்றிருக்கின்றன. ஆனாற் செய்கையளவிலே நாடு முழுவதற்குஞ் நன்மையளிக்கும்வகையில் நடைமுறைக்குக் கொணரப்பெற்ற மாற்றங்களைக் காணேம். இதற்கிடையிலே அரசியலமைப்பை ஆராயவேண்டிய அவசியம் பிரதமருக்குண்டாயிருப்பதைப் பார்த்தால் தமது ஆட்சிக் காலத்திலே சிங்கள இனத்துக்குத் தனி மதிப்புக்குரிய மாற்றங்களை வகுத்துத் தமக்கும் தம்மினத்தாரின் புகழ் கிடைப்பதற்கு வழிதேடும் சுயநல விருப்பத்தின் தூண்டுதல் காணப்படுகின்றது.

குடியரசு என்றால் என்ன? மக்கள் அனைவரும் மனமுவந்து நிறுவும் மனித பண்பாட்டுக்கமைவான ஆட்சியா அல்லது இனவெறியினாலேசிங்கள ஆதிக்கத்தை நிலைநாட்டும்தனி ஆட்சியா? தனிச்சிங்களச் சட்டம் அப்படியேயிருக்கின்றது. தமிழுக்கு நியாயமான உபயோக உரிமை என்ற பேச்சுப் பேச்சளவிலேயே நின்றுவிட்டது. திருக்கோணமலையிலேதமிழினத்துக்கு இருந்த செல்வாக்கு இல்லாமற்போகும்படிகடற்படைத் தளம் சீர்குலைந்துவிட்டது. பதவியாவிலே பகலும் இரவும் சிங்களக் குடியேற்றம் நடந்தவண்ணமாயிருக்கின்றது. இவ்வளவும் போதாதென்று குடியரசும் நிறுவப்போகின்றாராம். அதற்குதவியாக ம. ஐ. முன்னணி ஆதிக்கம் நிறைந்த பாராளுமன்றமே உபசபையை நிறுவுதல் வேண்டுமா? இது முறையாகுமா? அரசியல் அமைப்பை மாற்றவேண்டுமேயானால் நாட்டின்மக்கள் அதற்கென ஒரு மன்றத்தைத் தெரிவுசெய்து வைத்தலே அரசியல் ஞான முறையும் அநுபவ நெறியுமாகும்.

# இடையறாது நிகழும் அணு அசைவு

—:o:—

## அகிலத்தையும் அசைக்கும் - - அதிசயமான காட்சி

—0—0—

இறைவன் திருவுள்ளத்திற் கருணை பூத்தது. அதனால் அசைவுண்டானது. அதன் காரியமாய் உலகம் தோன்றிற்று. பேதமில்லா நிலைமையிலிருந்து பிரணவமும்முக்குணங்களும்தோன்றின. மேலும் அசைவுண்டானது. ஆகாயம் முதலிய ஐந்து பூதங்களும் தோன்றின. ஐம்பூதங்களின் கலப்பால் நாம் காணும் உலகம் உருவாயிற்று.

முழு உலகமும் அணு அசைவு நிறைந்ததாயிருக்கின்றது. மெதுவாகவோ உரத்தோ உச்சரிக்கப்பட்ட எந்த ஒரு மந்திரமும் பருத்தவையாயோ மெதுவானவையாயோ அணு அலைகளை உண்டாக்குகின்றன. இவ்வலைகள் உலகெங்கும் பரவுகின்றன.

காணப்படுபவை காணப்படாதவை ஆகிய இவ்வுலகிலுள்ள எல்லாப் பொருள்களும் இடைவிடாது அசைந்து கொண்டிருக்கின்றன. எல்லா அணுக்களும் அசைந்தபடியே யிருக்கின்றன. ஆகச்சிறிய அணு முதல் ஆகப்பெரிய கோள் ஈறாக எல்லாம் எப்பொழுதும் அசைந்தபடியே யிருக்கின்றன. மானிட தேகத்தை உருவாக்கியிருக்கும்அணுக்கள் எல்லாம் அசைந்தபடியே யிருக்கின்றன. சடப்பொருளிற் சக்தி தொழிற்படுதலால் எண்ணிறந்த தோற்றங்கள் உண்டாகின்றன. உருவங்கள் இடைவிடாது அழிந்தழிந்து புது உருவங்கள் இடைவிடாது தோன்றினபடி யிருக்கின்றன.

எங்கள் ஒவ்வொரு நினைவும் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வெர்ரு செயலும் அணு அசைவை உண்டாக்கி ஒவ்வொரு பொருளையும் தாக்குகின்றது. ஒவ்வொரு பிழையான நினைவோ சொல்லோ செயலோ தீய அசைவை உண்டாக்கி ஒவ்வொருவருக்கும் தீமையைச் செய்கின்றது. அப்படியே தூய நினைவு, சொல், செயல் ஆகிய ஒவ்வொன்றும் தூய அசைவை உண்டாக்கி நன்மையைச் செய்கின்றது.

மனம் இடைவிடாது அசைந்தபடியே யிருக்கின்றது. சூக்குமமனச் சக்தியால் மனம் தாக்குண்டு நினைவுருவங்கள் உண்டாகின்றன. மனம் அசைகின்றது. சாதனை மிகுந்த ஓர் யோகி தான் விரும்பும் தூரத்துக்கு தன் மனக் கருத்தை அனுப்பலாம். அசைவு வேக வேறுபாட்டால் எண்ணங்கள் வேறுவேறாகப் பிரிக்கப்படுகின்றன. எங்கேயாயினும் எப்பொழுதாயினும் ஒரு வேலை செய்யப்படும்பொழுது ஓர் அசைவுண்டாகின்றது. எங்கேயாயினும் எப்பொழுதாயினும் ஓர் அசைவுண்டாகும்பொழுது ஓர் சத்தம் உண்டாக்கப்படுகின்றது. அசைவற்றிருக்கும் இயற்கை முதன்முதலில் அசைந்து பிரணவமுண்டாகின்றது.

அசைவிலும் ஓர் ஒற்றுமை உண்டாதல் வேண்டும். அப்பொழுது சமாதானமுண்டாகின்றது. சுருங்குவதும் விரிவதுமான இருதயத்தின் ஒவ்வொரு அசைவிலும்ஒழுங்கிருக்கின்றது. அப்பொழுது இரத்த ஓட்டத்தில் ஒழுங்குண்டாகின்றது. அதனால் மனிதன் தேகசுகம் அனுபவிக்கின்றான். சுவாசப்பை சீராய்த் தொழில் செய்கின்றது; மனிதன் இன்பமடைகின்றான். இருதயத்திலோ சுவாசப் பையிலோ ஒழுங்கீனமுண்டாகுமேயானால் நீங்காத நோய்களுண்டாகின்றன; அவற்றால் மனிதன் இறந்து போகிறான்.

எல்லா அசைவுகளிலும் ஓர் ஒழுங்கு காண வருகின்றது. இவ்வசைவு விதி மனித உடலிலும் செயற்படுகின்றது. இரேசித்தல், பூரித்தல், இருதயம் ஒடுங்குதல் விரிதல நீர் வற்றுதல், பெருகுதல், நட்சத்திரங்களும் கோள்களும் அசைதல் போன்ற அசைவுகள் ஓர் ஒழுங்கின்படியே நிகழுகின்றன.

ஒவ்வொரு பொருளும் வேறுபட்ட அசைவையுடையதாயிருக்கின்றது. பல திறப்பட்ட அலைகள் உலகிற் பாய்கின்றன. சில அலைகள் ஒன்றை ஒன்று எதிர்த்துத் திருப்தியீனத்தையும் வெறுப்பையும் மோதுப்படுதலையும் உண்டாக்குகின்றன. வேறு சில அலைகள் அக்கம் பக்கத்தில் ஒற்றுமையாய்அசைகின்றன அவற்றால் ஒழுங்கும் சமாதானமும் உண்டாகின்றன. ஒரே விதமான அசைவுள்ளவர்கள் நட்புரிமை பூண்டு வாழுகின்றனர். மாறுபட்ட அசைவுள்ளவர்கள் அப்படி ஒற்றுமையாய் வாழ முடியாது.

ஒரே இடத்தில் இருக்கும்பொழுது அல்லது ஒருவருடன் சகவாசஞ் செய்யும்பொழுது ஒருவர்மிகுந்த சக்தியுடையவராயிராவிட்டால் மற்றவருடைய தீய நினைவின் அலைகள் அவரைத் தாக்கும். ஒருவர் பிராணயாமமும் தியானமும் ஒழுங்காகச் செய்து வந்தால பிழையான நினைவலைகள் அவரைத் தாக்கமாட்டா.

ஒருவர் தூயமனமுடையராயிருப்பதோடு விருப்பு வெறுப்பின்றி, சகிப்புத்தன்மை, அன்பு, இரக்கம் ஆதியவை உடையராயிருந்தால் தம்மைச் சூழ்ந்து நிற்போரின் மன அலைகளின் தன்மையை அவர் அறியக்கூடும். இவருக்கு யோக சித்தி உண்டாகலாம். இதனால் தம்மையும் தூய்மைப்படுத்தித்தம்மைச் சார்வோரையும் ஒருவர் தூய்மைப்படுத்துதல்கூடும்.

(ஸ்ரீ சுவாமி சிவானந்தா அவர்கள் எழுதிய கட்டுரை ஒன்றின் சாரம்.)

# இந்திக்குத் தென்இந்திய எதிர்ப்பு

—0—

இந்தியை உத்தியோக மொழியாக்குவதுபற்றித் திருப்பி ஆலோசிக்கவேண்டும்; இந்தி திணிக்கப்படுவதைஇப்பொழுது தேச ஒற்றுமைக்காகக் கைவிடுதல் வேண்டும்; பழக்கமான ஒரு உத்தியோக மொழியை விட்டுப் பரீட்சிக்கப்படாத ஒரு புதிய மொழியைக் கைக்கொள்வதால் பெரும் வசதியீனம் ஏற்படும் என்பதை மறுக்க முடியாது; இவ்வசதியீனத்துக்குப் பிரதிபலன் எதுவாயினும் உண்டோவென்றால் ஒன்றுமேயில்லை; நீதிக்காகவே இந்தியைத் தென் இந்திய மக்கள் எதிர்க்கிறார்கள்; ஒரு பிரிவினரல்ல தென் இந்தியாவைச் சேர்ந்த எல்லாப் பிரிவினரும் எதிர்க்கின்றார்கள் என்று குறிப்பிட்டு ஆங்கிலத்தையே தொடர்ந்து உத்தியோக மொழியாக வைத்திருக்குமாறு ஸ்ரீ சி. இராசகோபாலாசாரியர் "இந்து" பத்திரிகை ஆசிரியர் ஸ்ரீ கே. ஸ்ரீநிவாசன் திருவாங்கூர்ப் பழைய பிரதம நீதியரசர் ஸ்ரீ ரீ. எம். கிருஷ்ணசுவாமி ஐயர் முதலிய தென்னிந்திய அறிஞர்கள் பண்டிதநேரு அவர்களுக்கு வேண்டுகோள்விடுத்திருக்கின்றனர்.

—

## தனிச் சிங்களத் தீர்மானங்கள்

புகையிரதப்பகுதிச் சின்னத்திலுள்ள எழுத்துக்கள் அரசாங்கக்கடிதங்களிலுள்ள ஒ. எச். எம். எஸ். என்னும் எழுத்துக்கள் தொலைபேசி (ரெலிபோன்) இடாப்பு ஆகியவை எல்லாம் ஆங்கிலத்துக்குப் பதிலாய்ச் சிங்களத்தில் மாத்திரமே எதிர்காலத்தில் அமையுமாம்.

## நெற்காணிச் சட்ட திட்டம்

நெற்காணிச் சட்டதிட்டம் அரசாங்க பாராளுமன்றக் கட்சியினரால் இரண்டாம் முறையாக ஆலோசிக்கப்படுமாம். பாராளுமன்றப் பிரதிநிதிகளுக்குள் உரத்த கருத்து வேறுபாடு இருப்பதால் முதல் மந்திரி இவ்வாறு தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

## புதிய மந்திரி பதவி

இப்பொழுதுள்ள 14 மந்திரிகளுடன் திட்ட அமைப்புக்கென ஓர் புதிய மந்திரி பதவியைக்கூட்டுதற்கு அரசாங்கம் ஆலோசிக்கின்றதாம்.

# வாழ்க்கை வானில்

— வளர்மதி

## சந்திரனுக்குப் போக — வாரும் சகத்தீரே!

பத்து மணித்தியாலங்களிற் பயணம் பண்ணிச் சந்திரனைப் பார்த்துவிட்டுத் திரும்பும் வசதியை உலக மக்களுக்குஉதவஉருசிய விஞ்ஞானிகள் பொறி ஒன்றை உருப்படுத்துகின்றார்களாம். சந்திரக் கலைகளில்ஈடுபடுவதனால்இந்தஉலகத்திலே அமைதி நிலவும் தன்மை ஏற்படுமா? அல்லது மதி மயக்கம் கூடுதலாக உண்டாகுமா என்பதை விஞ்ஞானிகள் ஆராய்வது நல்லது.

## உதை பந்தாட்டம

## கல்லூரிகட்கிடையிற் கடும் போட்டி

### ஆட்ட நிகழ்ச்சிகள்

9-11-1957 சனிக்கிழமை 4-45 பிற்பகல் பரமேசுவரா — கொக்குவில் இந்துக் கல்லூரி.

13-11-57 புதன்கிழமை 4-45 பிற்பகல் பரமேசுவார யாழ் இந்துக்கல்லூரி.

16-11-57 சனிக்கிழமை 4-45 பிற்பகல் கொக்குவில் இந்துக்கல்லூரி — யாழ் இந்துக்கல்லூரி.

## வீட்டுக்குமட்டுமன்று விண்ணுக்கும் காவல்

நாய் நன்றியுள்ள மிருகம். வீட்டுக் காவலுக்கு விரும்பி வளர்க்கப்படும் நண்பன் என்றெல்லாம் படித்திருக்கிறோம். உதவிக்குரிய நாய் இப்பொழுது விஞ்ஞான வழி காட்டியாக விண்ணுக்குஞ் செல்லும் பயண நண்பனாக அமைந்துவிட்டது. உருசியக்கரடி என்று அரசியல் வழக்குஒன்று உண்டு. உருசிய நாய் என்ற மரபு இனி வழங்கும்போலும். வானுக்கப்பாற் சென்று கொண்டிருக்கும் நாய் தானாகக் கீழே இறங்கும் என்று சிலர் கருதுகிறார்கள். சந்திர யாத்திரையையும் முடித்துவிட்டு வரலாமே!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கொழும்பு இந்து வாலிபர் சங்கம்

மேற்படி சங்கம் ஐப்பசி மாதம் 10-ந் திகதி(26-10-57) சனிக்கிழமை நடைபெற்ற அதன் பொதுக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

“சைவ சமயிகளின் விரதங்களுள் மிகப் பிரதானமான மகா சிவராத்திரியும் ஆடி அமாவாசையும் அரசாங்கவிடுமுறைப் பட்டியலில் சேர்க்கப்படாததையிட்டு இச்சங்கள் ஆழ்ந்த கவலை தெரிவிப்பதுடன் இத்தினங்களை மீண்டும் அரசாங்க விடுமுறைப் பட்டியலிற் சேர்க்கும்வரை ஒன்று சேர்ந்து உரிமைக் குரல் எழுப்பும் வண்ணம் மிகப் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றது” இவ்வாறு காரியதரிசிகள் அறிவிக்கின்றனர்.

## அரசியலில்மாணவர்

மாணவர் அரசியற் கட்சிகளிற் சேர்ந்து அரசியற் கட்சிகளிற் சேர்ந்து அரசியற் கிளர்ச்சிகளில் ஈடுபடும்போது அவர்களின் மூளை வளர்ச்சி குன்றிவிடுகின்றது. கல்வி கற்குங் காலத்தில்மாணவர் அரசியலில் ஈடுபடுதல் ஆபத்தானதாகும். உயர்ந்தஇலட்சியங்களை முன்வைத்து மாணவர் உழைக்க வேண்டும். இக்காலமாணவர் பெரியபெரிய தீர்மானங்களைச் செய்து எங்களுக்கு மட்டுமல்லாமற் பிறநாடுகளுக்குமே ஆலோசனை கூறும் வழக்கம் இருந்து வருகிறது. இது எனக்கு ஆச்சரியத்தைத் தருகின்றது. மாணவர்கள் அவ்வளவு ஆற்றல் படைத்தவர்களானல் சர்வகலாசாலைகளுக்கு ஏன் போக வேண்டும்? உலக நிர்வாகத்தை எடுத்து நடத்த வேண்டியதுதானே என்று இலக்ஷ்மணபுரி சர்வகலாசாலை மாணவர் சங்கத்தை பண்டிதநேரு அவர்கள் ஆரம்பித்து வைத்துப் பேசும்போது கூறினர்.

## பொன்மொழி

“எழுந்திருங்கள், சோம்பலையும் மூடத்தனத்தையும் வீசி எறிந்துவிட்டு வெளியே உலாவி உலகத்தில் ஏனைய பாகங்களிலுள்ள மாந்தர்கள் முன்னேற்ற மடைந்து கொண்டுபோவதைப் பாருங்கள். எத்தனை நாளைக்கு மூலையில் ஒதுங்கிக் கிடக்கப் போகிறீர்கள். நீங்கள் சுத்த வீரர்களின் வழிப் பிறந்தவர்கள் என்பதை மறந்து விட்டீர்களா? சூரனுக்கு உயிர் துரும்பு; தேச முன்னேற்றத்துக்காக உயிரையும் கொடுக்கத் தயாராயிருக்கும் வாலிபர்கள் ஆயிரக்கணக்கான பேர் முன்வரவேண்டும், மேல் நிலையை அடைவதற்கு முயலுவோம். அம் முயற்சியில் உயிர் போனாலும் போகட்டும்.”

—சுவாமி விவேகானந்தர்.

# தமிழ்த் தாயர் வீரம்

(முற்றொடர்)

அச்ச மனப்பான்மை கொண்டவர்களாய் வாழும் இக்காலத் தாயரும் சேயரும் பண்டைய வீரத்தாயரையும் அவர் தம் சேயரையும் அறிதல் இன்றியமையாதது. பிற்காலத்திற் படையும் ஒழிந்தது. படைப் பயிற்சியும் ஒழிந்தது. அப்பயிற்சிக்குரிய வீரமும் அழுந்தது அவ்வீரப் பாலூட்டும் அன்னையரும் இலராயினர். பண்டைய வீரத்தாயர், தம் மக்கட்குத் தாமூட்டும் பாலொடு வீரம் முதலியவற்றை ஊட்டி வைத்தனர். என்பதைப் பின் வரும் புறப்பாட்டு நிகழ்ச்சிகளால் நன்கு அறியலாம்.

பொன்முடியார் என்னும் புலமைமிக்க வீரத்தாயார், ‘பெற்று வளர்த்தல் என் கடன். பெரியோனுக்குதல் தந்தைகடன். வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லர் கடன் நல்லொழுக்கம் நல்கல் வேந்தன் கடன். வெல்வதற்கு அரிய போரில் பகைவரை அழித்துக் களிற்றையெறிந்து மீளுதல் என் காளைக்குக் கடன் என்று தாய் தந்தையோர் கடமைகளை விளக்கியுள்ளார்.

வீரத்தாய், தன் சேய் பகைவீரா தலையைத் துணித்து, வாளின் முனை அழுந்தப் பெறுவானேல் அதுவே தனக்குத் தருமமும் தானமும் கருமமும் எனக்கொண்டனள்.

வீரச் சிறுவனைப் பெறுவதே தவப்பயன். அவனைப் போர்க்கு விடுப்பதே தானம்; அவன் வெற்றிபெற்று மீள்வதும், விழுப்புண்பட்டு வீழ்வதும் ஆகியவற்றுள் யாதேனுமொன்று கேட்டு மகிழ்வதே தருமம். இவ்வாறு கொண்ட தாயின் தகைமையன்றோ பெருந்தகைமை.

எதிர்த்துவந்த படையைப் பொறுமல், தன் இளம் புதல்வனிடம் வேலைக் கொடுத்து, முன்னோரது நடுகல்லைக் காட்டி, ‘செல்க போர்க்கு’ என்று விடுத்தாள் மறக்குடி மகள் ஒருத்தி.

போர்ப்பறை முழங்கக் கேட்டுத் தன் குலக்கொழுந்தைத் தழுவி, வெள்ளையுடை விரித்துடுத்து, மயிரிலே எண்ணெய்தடவி வாரிமுடித்து, ‘போர்க்குச் செல்க’ என்று ஏவினள் மற்றொருத்தி.

‘நடு கல்லிலே பொருந்தி நின்றான் என்தந்தை. போர்க்களத்திலே பட்டான் என் கணவன்; பகைவர் முன் நின்று எதிர்த்துப் பூசலிலே விழுந்தனர் என் தமையன்மார்; தன் சேனை கெடவும், கெடாமல் பின்னே நின்று பகையரசன் மேலே சென்று, உடம்பெலாம் அம்புகள் தைத்து முள்ளம்பன்றி போலே பட்டுக்கிடந்தான். என்னுடைய புதல்வன்’ என்று பெருமிதங்கொண்டாள் வீரமகள் ஒருத்தி.

‘முன்னொரு போரில் இவள் தகப்பன் யானையை யெறிந்து களத்தில் ஒழிந்தான். நேற்றைச் செருவில் இவள் கணவன் எதிர்த்தோரைக் கொன்று இறந்தான். இவ்வண்ணம் தந்தையும் கணவனும் மாளப்பெற்றும் தனி மகனாகிய இவனையும் பறையொலிகேட்டுப் போர்க்கோலஞ் செய்து, ‘களம் நோக்கிச் செல்க’’ என்று விடுத்தனள் ஒருத்தி.

கொக்கிறகுபோல் நரைத்த கூந்தலையுடைய முதியவள் ஒருத்தி, தன் மகன் போரில் யானையையெறிந்து கொன்று தானும் இறந்தான் என்று கூறக் கேட்டாள். மகன் பிறந்தபொழுதிலும் இறந்தபொழுது அவள் அடைந்த மகிழ்ச்சி பெரிது பெரிது! பெற்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே.

முதுமையிற் பெற்ற மகனைப் போர்க்கனுப்பிப் பிரிந்த தாய், இறப்பதற்கு வருந்தாமல் அவன் பெரிய களிற்றைக் கொன்ற வீரச்செயலைக் குறித்த சிறப்பிற்கு மிக மகிழ்ந்தனள்எனில், அவளது உள்ளத்து உரன் சொல்லத் தகுந்தரத்தாமோ!

முதியவள் ஒருத்தி, “உன் மகன் போரிற் படைக்குத் தோற்றுப்புறங்காட்டினன்” என்று பலர் கூறக் கேட்டாள். கேட்டதும் ‘என்மகன் போரில் தோற்று மீண்டானாயின், என் உடம்பைத் துணித்து இறந்துபடுவேன்’ என்று கையிலெடுத்த வாளோடு களத்திலே புகுந்தாள்: ஆவியிழந்த பிணங்களைப் புரட்டிப் புரட்டிச் செல்லுங்கால், மார்பிற் புண்பட்டு இறந்துபட்ட தன் மகனுடம்பு கிடத்தலைக்கண்டு, அவனைப் பெற்ற காலத்தில் உற்ற மகிழ்ச்சியிலும் பெரும் மகிழ்ச்சி எய்தினள்.

இளைஞர்களே,

வீர இளைஞர்களின் வீரங்களைப்படியுங்கள். வீரத்தாய்மாரைப்பற்றிய கதைகளைப் படியுங்கள். அடிமை மனப்பான்மையினை ஒழியுங்கள்.

இக்காலத்து வீரதினைப் பற்றி, முத்தமிழ்ப்புலவர்

# இந்துசாதன இளைஞர் கழகம்

இளைஞர்காள்,

இந்துசாதனத்தில்வெளிவரும் “கல்விக் கதிர்” மூன்றும் பகுதியில் (1-11-57 ‘வீரத் தாய்மார்’ என்னும் பொருள்பற்றிய கட்டுரையின் முன்னுரை வெளிவந்தது. அதன் தொடர்ச்சி இவ்விதழில் வெளிவருகின்றது. அதனை ஆர்வத்தோடு படித்துப் பாருங்கள்; வீரத் தாய்மார்கள் விளங்கிய காலம்அது. அக்காலம் தமிழ்நாடு சுதந்திரம் பெற்றிருந்த காலம். சேர சோழ பாண்டியர் என்னும்மூவேந்தரும் தமிழ் நாட்டிலிருந்து அரசுபுரிந்த காலம் சேர சோழ பாண்டியர் இலங்கையையும் ஆண்டு வந்தனர். இலங்கையை ஆண்ட தமிழ் அரசர்களுள்ளே தலை சிறந்து விளங்கியவன் எல்லாளன். பழந்தமிழ் நூல்களையும், அவற்றுள்உள்ள வீர இளைஞர் கதைகளையும் படியுங்கள். வீர இளைஞர்களைப் பெற்றவர்கள் வீரத் தாய்மார்கள்.

ஒருவர் பாடிய அழகிய பாட்டு ஒன்று உண்டு; அதனைப் படித்துப்பாருங்கள்.

‘தந்தை மதியினுஞ்
சாலுநன் மதியோன்
என்மகன் தீரன்
எசமான் கோபித்
தெட்டி யுதைத்த
காலினைப் பற்றி
முத்த மிட்டு
முன்னின்று பணிந்து
ஐயநின் காலுக் கடிமை
துயர் விளைத்தனன்
என்னக் கூறி
ஈரைந்து வெண்பொன்
சம்பள வுயர்ச்சி
சால்பி பெற்றனன்.

என்று கூறித் தன் மகனின் வீரத்தைப் புகழுகின்றாள் ஒரு தாய் – தற்காலத் தாய். இதுவும் வீரமாகுமா?

இதுதான் இக்காலத்துவீரம்.

போருக்குப் புறப்படுவது மாத்திரந்தான் வீரம் என்று எண்ணுதீர்கள்; நல்லவர்களாய், சான்றோர்களாய் வாழ்வது சிறந்த வீரத்தின் பாற்படும்.

உலகம் போற்றும் அரிய திருநூலினை அருளிய திருவள்ளுவ நாயனர்,

“ஈன்ற பொழுதிற்
பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்டதாய்”

என்று திருவாய் மலர்ந்திருக்கின்றார். தம் மக்கள் மேலோர் எனக் கேட்ட தாய் அவரைப் பிரசவித்த காலத்திற் காட்டிலும் அதிகம் மகிழ்வாள்.

மக்கள் தந்தைக்குச் செய்ய வேண்டிய கடமையைப்பற்றியும் திருவள்ளுவர் கூறியிருக்கின்றார்.

“மகன்றந்தைக் காற்றும்
உதவி இவன்றந்தை
என்னோற்றான் கொல் எனும்
சொல்”.

ஒருவர்தந்தைக்குச்செய்ய வேண்டிய கடமை இவர் தந்தை இவரைப் பெறுதற்கு என்ன தவம் செய்தாரோ என உலகத்தார் கூறுமாறு செய்தலேயாகும். இளைஞர்களே. ‘அறிவறிந்த’ மக்களாய், ‘பழி பிறங்காப் பண்புடை’ மக்களாய் வாழ்தலே நீங்கள் உங்கள் தாய் தந்தையர்க்குச் செய்யும் சிறந்த உதவியாகும்.

“நம்முடைய சிறுமைக்கெல்லாம் காரணமாயிருக்கிற பொறுமையையும் பிரிவினையையும் ஒருங்கே களைந்துவிட்டு உடல் பொருள் ஆவி மூன்றனையும் தேச சேவைக்கே ஒப்புக்கொடுத்து நமது தேசத்தையும் மொழியையும் பெருக்கமுறப் பண்ணுவோமாயின் நாமும் பெருமை அடைவோம்; நம் முன்னோரும் பெருமைஅடைவர்.”

## உயிருள்ள நாயுடன் மூன்றும் சந்திரன்

நாங்கள் பேசும் நவக்கிரகங்களுள் சந்திரன் ஒன்று. இவை மாத்திரமன்றிப் பிறபல கிரகங்களிருப்பதாக வான சாஸ்திரிகள் அறியத் தருகின்றனர். இவற்றுடன் இரண்டாம் சந்திரனுக உருசிய செயற்கைச் சந்திரன் வான வெளிக்கு வந்தது. இப்பொழுது மூன்றும் சந்திரனும் வானுலகில் இடம் பெற்றுவிட்டதாம். இது உருசியாவின் இரண்டாம் செயற்கைச்சந்திரன். இது உயிர்நாயொன்றுடன் உலகைச் சுற்றிவருகின்றதாம்.

சைவபரிபாலன சபையார் வெளியிட்ட
உபவாசகங்கள்

அரசினரால் அங்கீகரிக்கப்பட்டன

பால கதாவாசகம்
( சித்திர விளக்கப் பதிப்பு )

ஆசிரியர்
பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை

பாலகதாவாசகம்

| | | |
|---|---|---|
| நான்காம் புத்தகம் | ... | விலை சதம் 80 |
| மூன்றும் புத்தகம் | ... | விலை சதம் 65 |
| இரண்டாம் புத்தகம் (அச்சில்) | ,, | ,, 50 |
| இலக்கிய வாசகம் மூன்றும் புத்தகம் | ,, | |
| (அரிச்சந்திரன் கதையும் பஞ்சதந்திரச் செய்யுளும்) | ... | விலை சதம் 65 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணுக்கர் மதிவள மன்றம்

"தமிழ் வேள்"

(முற்றொடர் — 10)

## தருமிக்குப் பொற்கிழி அளித்த படலம்

இன்று என்ன பாடம். (தருமிக்குப் பொற்கிழியழித்த படலம்.

வம்மிசசேகர பாண்டியனின் பின்னர் மதுரையை யாண்ட மன்னன் யார்? (வம்மிச சூடாமணிப்பாண்டியன் காலத்திலே என்ன நடந்தது. கதையைச் சுருக்கமாகக் கூறுங்கள். நீர் கூறும். ஏனையோர் நன்கு அவதானித்துக் கொள்ளுங்கள்.

வம்மிசசூடாமணிப்பாண்டியன் சம்பகவனம் ஒன்றை ஆக்கினன், அவ்வனத்தில் மலர்ந்த சம்பக மலர்களால் சோமசுந்தரக் கடவுளை வணங்கி அவருக்குப் பணிகள் புரிந்து வந்தன்.

இளவேனிற் காலத்திலே ஒருநாள் சம்பகவனத்திலே ஒருநாள் அவன் தனது தேவியோடு இருந்தான். அப்பொழுது திவ்வியமான ஒரு சுகந்த மணத்துடன் தென்றற்காற்று வீசியது. அந்தக் காற்றிலே வீசிய நறுமணத்தை நுகர்ந்த பாண்டியனிடம் இம்மணம் இயற்கையானதோ செயற்கையானதோ என்ற ஐயம் உண்டானது.

அந்த ஐயத்தைக் நீக்கும் பொருட்டு பொற்கிழி (பொன் முடிச்சு) ஒன்றைச் சங்க மண்டபத்திலே தூக்குவித்தான். தன் கருததையுணர்ந்து செய்யுள் பாடும் புலவர்களுக்கு அது உரியதாகும் என அறிவித்தான். அவனுடைய கருத்தறியமாட்டாது புலவர்கள் வருந்தினர்.

இங்ஙனமாக, தருமி என்பவன் ஒரு வறியவன். அவன் தன் குறை வேண்டிச் சோமசுந்தரக் கடவுளிடத்திலே விண்ணப்ஞ் செய்தான்.

சோமசுந்தரக் கடவுள் தமிழிலே "கொங்கு தேர் வாழ்க்கை" என்னும் ஒரு செய்யுள்பாடி அவனிடங் கொடுத்தருளினுர். தருமி அதனைக் கொண்டுசென்று புலவர்களுக்குக் காட்டினுன். புலவர்கள் பாண்டியனுக்குக் கூறினர். தனது கருத்துக்கள் அச்செய்யுளின்கண் அமைந்திருத்தலைக் கண்ட பாண்டியன் — பொற்கிழியைக் கொள்ளுமாறு கட்டளையிட்டான்.

தருமி பொற்கிழியை அறுக்கும்போது; நக்கீரர், அச்செய்யுளிற் குற்றமுடைத்து" என்று கூறித் தடுத்தார். தருமி சோமசுந்தரக் கடவுளிடத்திலே சென்று முறையிட்டான்.

சோமசுந்தரக் கடவுள் புலவர் வடிவந் தாங்கிச் சென்று "நமது செய்யுளுக்குக் குற்றங் கூறியவர் யாவர்" என்ருர். நக்கீரர் "யானே" என்று தருக்கி முன்வந்தார். வந்த புலவராகிய சோமசுந்தரர் "யாது குற்றம்" என்ருர். சொற்குற்றமன்று,பொருட்குற்றம் என்ருர் நக்கீரர். பொருட்குற்றம் யாது என்ருர் புலவர். "பெண்கள் கூந்தலுக்குச் செயற்கை மணமன்றி இயற்கை மணம் இல்லை" என்ருர். நக்கீரர். இருவருக்குமிடையே தருக்கம் நடந்தது. இறுதியில் இறைவனுர் நெற்றிக் கண்ணைக் காட்டினுர். "நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே" என்ருர் நக்கீரர். எனினும் நக்கீரருக்கு அக்கண்ணின் வெம்மையைப் பொறுக்க முடியவில்லை. அதனல் ஓடிச் சென்று பொற்ருமரை வாவியிலே விழுந்தார். புலவராகிய இறைவனுர் திருவுருக்கரந்தருளினுர்.

இனி இப்பாடத்தில்வரும் அரும்பதங்களைக் கூறுவேன். அவதானித்துக் கொள்ளுங்கள்.

நந்தவனம் - பூந்தோட்டம், இண்டை - ஒருவகை மாலை; இளவேனில் - ஒரு பருவம் (சித்திரை வைகாசி மாதங்கள்; சந்திரகாந்தம் - சந்திரப்பிரகாசம் (நிலவொளிபட்டால் நீர் துளிக்குங்கல்) திவ்வியம்-இனிமை; பொற்கிழி-பொன் முடிச்சு, சர்வஞ்ஞர் -முற்றறிவுடையவர், திரிபுண்டரம் - முக்குறிப்பூச்சு; தண்டிகை- கழுத்தணியிலொன்று; பாதுகை - மிதியடி (திருவடிநிலை, கற்றுச் சொல்லிகள்- சிறுகவிஞர்கள் (மாணுக்கர்கள்; அலைதல்-கலத்தல், திருவுருக் கரத்தல் - கிருபாவுருவம் மறைதல். இனி, இப்பாடத்திலே குறிப்பிட்டசெய்யுள் பாண்டியன் பொருட்டாக இறைவனருள் பாடப்பட்டுத் தருமியின் வறுமையைப் போக்கும் பொருட்டாக வழங்கப் பட்டது.

தலைவியின் கூந்தல்இயற்கை மணமுடையதென்பது இப்பாடலின் பொருள்.

மணமாராய்ந்து திரிதலே வாழ்வாக வுடைய உட்சிறகினையுடைய வண்டே! நீயறியும் மலர்களில் பழகிய நட்பினுலாவது - விருப்பினுலாவது பொய்யுரையாது கண்ட வுண்மைமைக் கூறுவாயாக. அதாவதுமயிலின் சாயலும் நெருங்கிய பற்களுமுடைய பாண்டியன் தேவியார் கூந்தல்போல நறுமணம் வீசும் நல்ல மலர்களும் உளவோ என்பதாம்.

இன்னும் இதற்குச் சிறப்பான பொருள் உளது. செய்யுளை மனனம் செய்து கொள்ளுங்கள். அடுத்த பாடத்தில் இன்னும் சிறிது விளக்கமாகப் பொருள் கூறுவேன்,

வணக்கம்.

# நாட்டுப்பாடல்

## எண்ணெய்ச்சிந்து

மட்டக்களப்பு வித்துவான் பண்டிதர் F. X. C நடராசா அவர்கள் 'எண்ணெய்ச் சிந்து' என்னும் அரிய நூலினை ஆராய்ந்து வெளியிட்டுள்ளார்கள். இதற்கு முகவுரை அளித்தவர் மட்டக்களப்பு சைவத்திருவாளர்.தேசிகமணி கா.அருணசலம் அவர்கள் ஆவர். அவருடைய முகவுரையில் முற்காலக் கல்வியையும் தற்காலக் கல்வியையும் ஒப்பு நோக்கி அழகாக எழுதியுள்ளார்கள். ஆசிரியர், பெற்ருர், மாணவர் யாவருக்கும் இன்பம்அளிக்கும் இச்சிறு நூலினை வழுக்களைந்து வெளியிட்ட பண்டிதருக்குத் தமிழ் உலகம் நன்றி கூறுதல்வேண்டும். இதன்கண் உள்ள விஷயங்களைப்பற்றிக் கூறுமிடத்துத் தேசிகரவர்கள் கூறுவது பின்வருமாறு:

'இந்நூலின்கண், தந்தையும் தாயும் மக்கட்பேறு கருதி வழிபடு தெய்வத்தை வேண்டுதல்; சிசு உற்பத்தியாகி மாசந்தோறும் வளர்ந்து, வளரும் பாங்கையும், பத்தாமாசத்தில் பிரசவிக்குந் தன்மையையும் அறியச் செய்தல்; உடன் துணையாளர் தாய்க்கும் பிள்ளைக்கும் செய்யும் பராமரிப்பைக் கூறல்; சாதக கருமம் முதலிய சத்கருமங்கள்செய்தல், பாலப்பருவம் முடிந்து, பள்ளிப்பருவம் வந்தவுடன் நல்லாசிரியனையழைத்து வித்தியாரம்பஞ் செய்யும் முறைகளை விளக்கல்; கற்ருேர் பெருமைகளையும் கல்லார் சிறுமைகளையும் சிறப்பாய்க்கூறல்; இப்பொழுது தாங்கள் வீட்டுக்கு வந்திருக்கும் நோக்கங்களையும், அதை நிறைவேற்றி மகிழ்ச்சியாய் வேண்டியன ஈந்து கடமையாய் அனுப்பி வைத்தல் வேண்டும் என வேண்டல்; அங்ஙனம் செய்யா தொழியின் காலங்கழிவதுடன் உபாத்தியாயரும், சட்டாம்பிள்ளையும் தங்களுக்குச் செய்யும் சிட்சைகளைக் கூறல்; அழியாக் கல்வியைத்தந்த இவர்கள் நன்றியை மறத்தல் கூடாதெனவும், கேட்டுக் கடன் வாங்கியாவது தந்தனுப்பல் வேண்டும் எனல்; என்பனவாகிய பலதிறப்பட்ட பொருள்கள் உள்ளன. இக்காலங் கேட்கப் பிரியங் கொடாதனவுமுள.

இச்சிந்தும், ஓலைச்சுவடிகளில் பலவிதமான மாற்றங்களை யடைந்துள்ளது; இலங்கையின் மற்றெப் பாகங்களிலும் பார்க்க, மட்டக்களப்பில் பெருவழக்காய் நிலவி வந்துள்ளது. இன்னும் இப் பகுதிகளில் பல வீடுகளில் இவ்வேடுகள் இருக்கின்றன."

யாழ்ப்பாணத்தில் வழங்கிய எண்ணெய்ச் சிந்துக்கும் இதற்கும் வேறுபாடுகள் உண்டு.

## தமிழ்க்கலை மன்றத்தின் வேலைத் திட்டம்

தமிழ்க்கலை மன்ற நிர்வாக சபையார் திரு.சி.ஜே. இளைய தம்பி அவர்கள் தலைமையில் நாவலர் பாடசாலை மண்டபத்திற் கூடிய கூட்டமொன்றில் பின்வரும் வேலைத்திட்டத்தை அமைத்திருக்கின்றனர்:-

1. தமிழர் கலாசாரத்தை வளர்ப்பதற்கு ஓர் பத்திரிகை வெளியிடுதல்.

2. கலாசார நூல்களை மொழிபெயர்த்தல்.

3. இலக்கிய நூல்களை உரையுடன் வெளியிடுதல்.

4. நாட்டுப் பாடல்கள், நாடகங்கள் முதலியவற்றை வெளியிடுதல்.

5. இலங்கைத் தமிழ்ப் புலவர்கள் எழுத்தாளர்கள் ஆகியோரின் நூல்களைக் கொண்ட ஓர் நூல் நிலையத்தை நிறுவுதல்,

6. அறிஞர் தினங்களைக் கொண்டாடுவதோடு அவர்களின் போதனைகளைப் பரப்புதல் என்பவற்ருேடு தமிழ்க் கலாசாரத்தை வளர்த்தற்குக் களியாட்ட விழாக்களும் பொருட்காட்சிகளும் நடத்துதல்.

## கிரக யாத்திரைபற்றி நேருவின் நம்பிக்கை

இந்திய சர்வகலாசாலை மாணவர் விழா ஒன்றில் பண்டித நேரு அவர்கள் பேசும்போது கிரகங்களுக்கு எதிர்காலத்தில் மனிதன் செல்லக்கூடுமென்ற நம்பிக்கையுடையார் என்பது புலப்பட ஓர் கருத்து வெளியிட்டுள்ளார். அவர் பேசும்போது சந்திரன் முதலிய கிரகங்களுக்குச் சென்று மனிதன் வெற்றியீட்டுவதை எனது வாழ்நாளில் நான் பார்க்க முடியாமல் வரலாம் என்பதை நினைக்கும்போது கவலையடைகின்றேன். என் கனவுகள் பல வாழ்க்கையில் நனவாகிவிட்டன. ஆனல் ஒன்று நிறைவேருதுபோ லிருக்கின்றது.

கிரகயாத்திரை யுகத்திற் பிரவேசிக்கின்றது இன்றைய உலகம். சந்திரன் முதலிய கிரகங்களுக்குச் சென்று மக்கள் வெற்றியீட்டுவதைப் பார்க்கவேண்டுமென்பது எனது பேரவா. ஆனல் எனது அவா நிறைவேருமற் போகலாமென்பதை நினைக்கும்போது கவலையாயிருக்கின்றது. என்னுடைய வயதை யடையும்போது நீங்கள் சந்திரனுக்குப் போய்வரக்கூடுமென்று நான் நம்புகின்றேன் என்று கூறினுர்.

# கணிதவிஞ்ஞானம்

விநோதச்சதுரம் — 2

சென்றவார இந்து சாதனக் கல்விக் கதிரில் விநோதச் சதுரம் ஒன்றனை அமைக்கும் வழியினைக் கூறினேம்.

அதன் தொடர்பாக இன்னும் பல விநோதச் சதுரங்களை அமைக்கலாம். 16 அறைகளுள்ள சற்சதுரம் ஒன்று வரைக. அதில் பின்வரும் வெண்பாவிற் சொல்லியபடி (முன்போல) 1 முதல் 12 ஈருகவுள்ள எண்களை அவ்வவற்றிற்குரிய அறைகளில் எழுதுக.

"எட்டொன்று பூச்சியமே
பத்துப் பதினென்று
வட்டமே நான்கைந்தொ
டோரிரண்டு — எட்டதனில்
ஒன்ருெழிந்த தொன்பான்
உறுஞ்சூ னியமின்மை
பன்னிரண்டு பாதியதிற்
பால்.

[பூச்சியம், வட்டம்; சூனியம், இன்மை பூச்சியத்தைக் குறிக்கும் (0); இவை வெற்றிடமாக விடப்பட்டுள்ளன. பால் = பாதி.]

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | 1 | | 10 | அ |
| 11 | | 4 | 5 | ஆ |
| 2 | 7 | 9 | | இ |
| | 12 | 6 | 3 | ஈ |

உதாரணமாக 117 ஐக் கொண்டோம். 117 ஐ 20 ஆற் பிரித்து, வரும் ஈவாகிய ஐந்தினுல் 1 - 12 எண்களைத் தனித் தனி பெருக்கி; வந்த எண்களை அவ்வவ் வறைகளில் அடைத்தோம்.

ஈவினை 4 ஆகவும், மிச்சத்தை 37 ஆகவும் கொண்டு $(20 \times 4 + 37 = 117)$ எண்களை நாலினுற்பெருக்கி வரும் எண்களை முந்திய முறைப்படி எழுதப் பின் வரும் சதுரம் உண்டாகும்.

| | | | |
|---|---|---|---|
| 32 | 4 | 41 | 40 |
| 44 | 37 | 16 | 20 |
| 8 | 28 | 36 | 45 |
| 33 | 48 | 24 | 12 |

இங்ஙனமே 3 ஈவாகவும் 2 ஈவாகவும் கொண்டு சதுரங்கள் அமைக்கலாம். பிறவும் இப்படியே.

மா. பீதாம்பரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசித்தாந்தக் கருத்துக்களைப் பரப்புவதில் பேரார்வம் கொண்டவர்

## சைவப்பெரியார் திரு. சி. நாகையா அவர்கள் மறைவுபற்றி அனுதாபம்

1957ம் ஆண்டு ஐப்பசி (ஒக்ரோபர்) மாதம் 27 ந் தேதி கீரிமலைச் சிருப்பர் மடத்திலே நடந்த அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்திய மகாசபையின் நிருவாகசபைக்கூட்டத்தில் திரு. சி. நாகையா அவர்களின் பிரிவுபற்றிய பிரேரணையில் தலைவர் திரு. வி. வீரசிங்கம் B. A. J.P. அவர்கள் பேசும்போது,

திரு. நாகையா அவர்கள் எங்கள் சபை செவ்வனே நடந்து வருவதற்குப் பேருதவியாயிருந்தவர். சென்ற 2 வருட காலமாக உடல் நலங் குன்றியிருந்தபோதும் இச் சபை நடாத்திய சிவஞானபோத வகுப்புக்களுக்கு ஆசிரியராயிருந்து தவறாது சமுகந்தந்து வகுப்பு நடாத்தி வந்த தொண்டினை நாமொருபோதும் மறக்க முடியாது. இவர் இளமை தொட்டுச் சமய உணர்ச்சியை வளர்த்துச் சைவமுறை தவறாது பல பெரியோர்களையுங் குருவாகக் கொண்டு சைவ சித்தாந்தத்தை நன்கு படித்து அதைப் பரப்ப வேண்டுமென்ற பேரார்வமுடையவர் தன்னுடைய விளக்கத்திற்கேற்பத் தெரிந்த உண்மைகளைப் பயப்படாது சொல்லியும் செய்தும் வந்தார். சைவ உலகில் இவர் வகித்த இடம் வெளியாகி விட்டது. இவர். ஆன்ம சாந்தியடைய வேண்டுமென்று பிரார்த்திப்போமாக" என்று கூறினர்.

திரு. மு. ஞானப்பிரகாசம் B. A, Bse. அவர்களும் தலைவர் குறிப்பிட்ட விஷயங்களை அனுவதித்துப் பேசி அனுதாபந் தெரிவித்தார். சபையோர் எழுந்து மௌனத்துடன்நின்று மரியாதையைத் தெரிவித்தார்கள்.

இந்த அனுதாபத் தீர்மானத்தை மறைந்த பெரியாரின் குடும்பத்தாருக்கு அனுப்பி வைக்கவேண்டுமெனவும் தீர்மானிக்கப் பட்டது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மானிப்பாய்
சிவக்கொளுந்து இராசேந்திரம்
—வழக்காளி.

இல. 10493.

எதிராக

காவாந்துறை
மிக்கேல் செபமாலை
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 10493–ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1957ஹு மார்கழிமீ 14உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

### காணி விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக்கோவிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கிறை பராயடி நிலைப்பரப்பு ஒன்றரை (1½) வீடும் செய்பயிர்களும் எல்லை கிழக்கு லோறன்சு சந்தியாவும் பங்காளரும், வடக்கு வாய்க்கால், மேற்கு ரோட்டு, தெற்கு ஒழுங்கை இதில் சொரியலாய் 1/3 பங்கும் மதற்குச் சேர்ந்தவைகளும்,

2. ஷெவண்ணார்பண்ணை மேற்கிறை நாவலடி நெற்பரப்பு 5 5/8 ம் செய்பயிர்களும், எல்லை கிழக்கு கிறிஸ்தோ கைம்பெண் பொன்னம்மாவும் மறுபேரும், வடக்கு சின்னத்தம்பி சுப்பிரமணியம், மேற்கு சந்தியா பிலிப்பு தெற்கு சந்தியா அந்தோனிப்பிள்ளையும் பங்காளரும் கை ஒழுங்கையும் இதில் சொரியலாய் அரை வாசியும் மதற்குச் சேர்ந்தவைகளும்.

ஆ. ச. கந்தையா,
கொமிஷனர்

காரைநகர்.
23-10-57.
M 151 8-11-57.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

ஊர்காவற்றுறை கிழக்கு மனுவல் பறுனந்து சிங்கராயர் கைம்பெண் சூசன்சிங்கராயர். இவர் காலஞ்சென்ற மனுவல் பறுனந்து சிங்கராயரின் ஆதனத்துக்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு 904 ம் இலக்க மரண சாதனத் தத்துவ வழக்கில் தத்துவகாரி.

வழக்காளி.

இல. M B 1044।

எதிராக

மரணித்தவர்
1 சரவணை இராசசிங்கம் தம்பையாவும்
2, ஷெ பெண் மூத்தாச்சி அம்மா தானுகவும்
காலஞ்சென்ற புருஷன் 1-ம் எதிரியின் ஆதனத்துக்குத் தத்துவகாரியாகவும்.
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 1044 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1957 ஹு மார்கழி மீ 13 உ வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 1899–75 ம் இதில் ரூபா 1000 க்கு 19-6-56 திகதி தொடக்கம் 4-6-57 வரைக்கும் வருடமொன்றுக்கு 100க்கு 9 வீத வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 276-06.

### காணி விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோயிற்பற்று சரவணை இறை பெரியவளவு நிலைப்பரப்பு 12ம் பனைகள் கிணறும் எல்லை கிழக்கு குமாரன் இராமலிங்கமும் பொன்னப்பா சோமசுந்தரமும் வடக்கு மாரிமுத்து பெண் சின்னம்மா மேற்கு தில்லையம்பலம் பெண் இராசம்மாவின் உரிமைக் காறரினுதனம், தெற்கு இராசசிங்கம் பரகிருபசிங்கம் இதடங்கலும்,

2 ஷெ சரவணை இறை சென்னுன் வயல் நெற்பரப்பு 12. எல்லை கிழக்கு நாரந்தனை கந்தசாமி கோயிலுக்குரிய வாதனம். வடக்கும் மேற்கும்காலஞ்சென்ற சுதாமிநாதர் நமசிவாயம்பிள்ளையின் உருமைக்காறரினுதனம். தெற்கு சின்னப்பன் காசிப்பிள்ளைக்கும் சகோதரங்களுக்கும் சகோதரிகளுக்கு முரியவாதனம். இதிற் சொரியலாய் ½ பங்கு.

ஆ ச. கந்தையா
கொம்மிஷனர்

காரைநகர்
22-10-57.
M, 150 8-11-57,

# உங்கள் நக்ஷத்திரம்?

**எங்கள் சோதிடம்**

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 10—11—57 —— 16—11—57. ]

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

கந்தோரிலும் வீட்டிலுமுள்ள உம்முடைய தொந்தரவுகள் நீக்கப்படாது தொடர்ந்து நிலைத்திருக்கின்றன. மனைவி மக்களுக்குச் சுகவீனத்துக்கிடமுண்டு பணத்துறையிலும் இந்த வாரம் நல்லாயிருக்கமாட்டாது.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,**

ஒரு நல்ல வாரம். இடைஞ்சல்களை நீக்கி உம்முடைய திட்டங்களை நீர் முன்னேற்றக்கூடியதாயிருக்கும். ஆனால் குடும்பச் சூழலில் எல்லாம் நல்லாயில்லை. பெண்ணின நண்பர் அதிக உதவியாயிருப்பர்,

**மிதுனராசி மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.**

பணத்துறையில் · நல்லவாரம். நிலையாய் நிற்கும் உம்முடைய கடன்களுட் சில நீக்கப்படும் பகைவரை வெல்லுதற்கும் புகழுக்கும் இடமுண்டு. ஆனால் மனச்சமாதானமிருக்கமாட்டாது, தேகசுகமும் நல்லாயிருக்கமாட்டாது.

**கடகராசி புநர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.**

நண்பருடன் பிழை எண்ணங்களுக்கும் சண்டைகளுக்கும் இடமுண்டு. மாதாவழி இனத்தவர் உமக்குச் சிறிது கோபம் மூட்டக்கூடும். சிறு அபாயங்களுக்கும் வாகனங்கள்மூலம் தொந்தரவுகளுக்கும் இடமில்லாமலில்லை, தேகசுகம் மற்றொரு சிக்கலாயிருக்கும்.

**சிங்கராசி மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்.**

பணக் கருமங்களுக்கு நல்ல வாரம், உம்முடைய பழைய முதலீடுகளிலிருந்து நீர் சிறிது இலாபமடைவீர், இனத்தவர்களுடன் சண்டைகளுககிடமுண்டு. மாதாவின் தேகசுகம் பாதிக்கப்படக்கூடும்,

**கன்னிராசி உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

உத்தியோக கருமங்களுக்கு நல்ல வாரம். புது முயற்சிகள் நல்ல பலனைத் தரும். சகோதர சகோதரிகள் அதிக உதவியாயிருப்பர். வார இறுதியிற் சண்டை தொடுக்க நீர் முந்துவீர்.

**துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.**

தேகசுகம் இன்னமும் சிக்கலாகவேயிருக்கின்றது. குடும்பச்சூழலில் சண்டைகளுக்கும் பிழை எண்ணங்களுக்கும் இடமுண்டு. நண்பர் அதிக உதவியாயிருப்பர். செலவு அதிகரிக்கும் அதனால் வரவு செலவுகளைச் சமாளிக்க மாட்டாது நீர் வருத்தப்படுவீர். வாரத்தின் முதல் நாள் கவனமாய்க் கழிக்கவேண்டும்,

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.**

உமக்கு மனச்சமாதானமிருக்கமாட்டாது. சுகவீனங்களுக்கும் இடமுண்டு. வீட்டிலும் வேலை செய்யும் இடத்திலும் கருமங்கள் குழப்பமாகவேயிருக்கும். ஆனால் பாரதூரமான ஆபத்துகள் உண்டாகமாட்டா. திங்களும் செவ்வாயும் தொந்தரவானவையாயிருக்கும்,

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,**

ஒரு தளப்பமான வாரம், உம்முடைய செலவைக்கட்டுப்படுத்த முடியாது வருத்தப்படுவீர், தேகசுகமும் நல்லாயிருக்கமாட்டாது. கண் நோய்களுக்கிடமுண்டு. அந்நாட்களில் அவர்களுடனுமே சண்டை தொடுக்க முந்துவீராக லின் புதனும் வியாழனும் தவிர நண்பர் அதிக உதவியாயிருப்பர்.

**மகராராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,**

ஒரு நல்ல வாரம். உம்முடைய உத்தியோக கருமங்களில் அதிக திருத்தங்களைக் காண்பீர். புதுக் கருமங்களில் இலாபங்களும் நிச்சயம். மாதாவழி இனத்தவர் உமக்குச் சில தொந்தரவுகளை உண்டாக்கக்கூடும். கடைசி இரு நாட்களையும் கவனமாய்க் கழிக்கவும்,

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,**

எதிரில் வரும் சில நாட்களுக்குக் கருமங்கள் குழப்பமாயிருக்கும், நீர் விருப்பியபடி செய்தற்கு மிக வருந்தி வேலை செய்யவேண்டும், ஆனால் இடைஞ்சல்கள் மிக விரைவில் நீக்கப்படும். நல்ல காலம் எதிரில் வருகின்றது.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி**

பணத்துறையில் நல்ல வாரம். ஆனால் குடும்பச்சூழலில் இடைவிடாத தொந்தரவுகளும் பிழை எண்ணங்களுமிருக்கும் சுகவீனங்களுக்கும் இடமுண்டு. ஒன்றையும் [illegible] வேண்டாம்.

# தேகவியோகம்

**நாவாலியூர் ஸ்ரீமான் சி. தம்பையாஉபாத்தியாயர்**

நவாலியூர் ஸ்ரீமான் சி. தம்பையா உபாத்தியாயர் அவர்கள் சென்ற சனிக்கிழமை (2-11-57) அதிகாலையில் இறைவனைத் தியானித்தபடியே தேவாரம் ஓதும்படி கூறி, அதைக் கேட்டுக்கொண்டே சிவபதம் அடைந்தார்கள்.

இவர்கள் ஆலயங்களில் பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் முதலிய சைவப் புராணங்களுக்கும் சைவத் திருமுறைகளுக்கும் அரிய பொருள் விரிக்குந் தொண்டில் கலைசிறந்து விளங்கியவராவர். அரிய பொருள் கூறுவதோடு, இசையறிவோடு கூடிய இனிய குரலில் இவர்கள் பொருள் சொல்லும்போது அழுத பிள்ளையும் வாய்மூடிக்கேட்டுக்கொண்டிருக்கும். இவர் வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளையவர்களின் பாடங்கேட்டவர். மானிப்பாய் இந்துக்கல்லூரியின் ஆரம்பகாலத்திலிருந்தே பல ஆண்டுகளாக அங்கு தமிழ்ப் பண்டிதராக இருந்து கற்பித்து வந்தவர். இவரிடம் பாடங்கேட்டவர் பலர். அவர்களுள்; காலஞ்சென்ற பிரமஸ்ரீ சங்கர சுப்பிரமணிய சச்சிதானந்த இராஜயோகிகளும் ஒருவராவர். தமிழ்ப் பண்முறைகளையும் இவர்கள்நன்கறிந்தவர்கள். உறைத்த சைவப்பற்றும் தமிழார்வமும் நிறைந்தவர்கள். நவாலியூரிலுள்ள அரசினர் பாடசாலையை முதன்முதல் ஆரம்பித்து நடத்தி அதனை அரசினர்க்கு உதவியவர் இவரே. இன்னும் இவர்கள் செய்துவந்த தமிழ் சைவப் பணிகள் பலவாம். சென்ற ஆண்டில் தமிழ் மக்கள் இவர்தம் பணியைப் பாராட்டுமுகத்தால் இவர்கட்குப் பொன்னுடை போர்த்துப் பொற்கிழி வழங்கி இவரைக் கௌரவப்படுத்தினர். இறக்கும்போது இவருக்கு வயசு 97. இவர்தம் ஈமக்கிரியைகள் நவாலியூரில் சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை 11மணிக்குப் பெருந்திரளான மக்கள் மத்தியில் மிக்க சிறப்பாக நடைபெற்றன. வைத்தீஸ்வர வித்தியாலயப் பிரதமாசிரியர் திரு எஸ். அம்பிகைபாகன் அவர்கள் வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் ஆதியோர் இவர்கள் பணியையும் பாண்டித்தியத்தையும் பாராட்டிச் சொற்பொழிவுகள் ஆற்றினர்.

இவரைப் பிரிந்து வருந்தும் இவர் மருகராகிய வித்துவான் திரு. க. கி. நடராஜன் அவர்களுக்கும் ஏனைய சுற்றமித்திரர்களுக்கும் எமது மனமார்ந்த அநுதாபம் உரித்தாகுக.

# சமய தீட்சை

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாதரவில் ஷெ சபை நாவலர்மண்டபத்தில் ஐப்பசி மீ ௨0 உ (5-11-57) கடைசி வெள்ளிக்கிழமையன்று நீராவி மடம் ஸ்ரீமத் ந. வைத்தியநாதக்குருக்கள் அவர்கள் சைவச் சிறுவர்களுக்கும் முதியோர்களுக்கும் காலை 8 மணி தொடக்கம் சமய தீட்சை செய்து வைப்பார்கள். சமய தீட்சை பெற விரும்புபவர்கள் குறித்த நேரத்தில் குறித்த இடத்துக்கு ஆசார சீலராய் வந்து சேர்வார்களாக.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்,
சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம், 6-11-57.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—O—

இல M. B. 890

சின்னத்தம்பி நல்லதம்பி அச்சுவேலி தெற்கு

வளக்காளி

வல்லிபுரம் நல்லையா, வல்லை அச்சுவேலி

எதிராளி

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் M. B. 890-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணி 1957ஹு மார்கழிமீ மூன்றும்உ செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடககம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும், முதலும் வட்டியும் ரூபா 1382/50 முதல் ரூபா 1000/-க்கும் தீர்வைத் திகதி 19-3-56 தொடக்கம் 28-6-56 மட்டும் வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 175.02 சதம். அதாவது செலவளித்த செலவு ரூபா 115.15 சதம், சட்டதிருபண செலவு ரூபா 32,57, செலவு ரூபா 27.30 சதம்.

தீர்வைத்தொகை.-முதல்வட்டி ரூபா 1382/50-ம் இதற்குத் தீர்வைத்திகதி தொடக்கம் 100-க்கு 5 வீத வட்டியையும் இறுக்க வேண்டும்.

### காணி விபரம்

1, வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வல்லை, அச்சுவேலி, வலிகாமம் கிழக்கு கோவிற்பற்று "சவுத்திராயு கலட்டி" என்னும் காணி நெல் பரப்பு 12. செய் பயிர் வகைகளும். எல்லை கிழக்கு வல்லிபுரம் நாகலிங்கமும் மற்றவர்களின் ஆதனம், எல்லை வடக்கு தம்பர் அருளம்பலத்தின் ஆதனம். எல்லை மேற்கு நாகமுத்து கந்தையாவின் ஆதனம், எல்லை தெற்கு வீரகத்திப்பிள்ளை கந்தையாவின் ஆதனம். இதற்குள் 5 பரப்பு செம்மைபண்ணின காணி, முழுவதற்கு தண்ணீர் பங்கும் வளிவாய்க்கால் உருத்தும். கிணறு மேற்குப்பக்கத்தில் இருக்கிறது, இது K. 161/222 நம். பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

2. அதேயிடத்தில் "வந்தபுலம்" என்னும் காணி நெல்பரப்பு 30 பனைமரங்களுடன். எல்லை கிழக்கு வேதநாயகம் பெண் பார்வதியின் ஆதனம். எல்லை வடக்கு தம்பர் சிறினிப்பிள்ளை செல்லையாவும் பங்காளரின் ஆதனம், எல்லை தெற்கு வல்லிபுரம் வைரமுத்துவும் மற்றவர்களின் ஆதனம். இதுகளெல்லாம் K. 89/103 நம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இ. கனகரேத்தினம்
Commissioner of Sales
21—10—57

R. Kanagaratnam
No. 35 Chundikuli
Jaffna
M 147 8-11-57,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு வழக்கு இலக்கம் M.B/1472,

யாழ்ப்பாணம் சுதுமலை
1, செல்லப்பா நாகலிங்கமும்
2, தம்பிநாதர் மகள் அன்னம்மாவும்

—வழக்காளிகள்'

விரோதமாக

மானிப்பாய் தன்னை நன்னி மாரிமுத்து —எதிராளி.

மேற்குறித்த கோட்டார் மேற்குறித்த இலக்க வழக்கில் எனக்கனுப்பிய கமிஷன் கட்டளைப் பிரகாரம் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1957-ம் ஆடிசெம்பர் மீ 14ம்உ சனிகிழமை முற்பகல் 10 மணியளவில் குறித்த ஆதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிமேற்கு மானிப்பாய்க் கோயிற்பற்று, மானிப்பாயிறை ஒல்லை வளவும் பெத்தநாச்சி தோட்டமும் நிலப்பரப்பு $4\frac{3}{4}$ இன்னும் ஒல்லை வளவு அல்லது பெத்தநாச்சி வளவும் நிலப்பரப்பு 2 இருவகையுங்கூடிய நிலப்பரப்பு $6\frac{3}{4}$ ம் இதைச் சேர்ந்த வீடும் தலைவாயிலும் மாட்டுக்கொட்டிலும் கிணறும் வான் பயிர்களும், இதற் எல்லை கிழக்கு எதிரியின் ஆதனம். வடக்கு புன்னன் நாகமுத்து பசுபதியின் ஆதனமும் கையொழுங்கை முகப்பும் மேற்கு எதிரிக்கும் மருது கணபதிக்கும் உரிய ஆதனங்கள். தெற்கு ஒழுங்கையும் எதிரியின் ஆதனமும். இதடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபா 997-50ம் ரூபா 600-க்கு 7-2-57 துவக்கம் 4-4-57 வரையும் ஹு 1க்கு 100க்கு 9 வீத வட்டியும் அதன்பின் மொத்தத் தொகைக்கு இறுக்கும் திகதிவரையும் ஹு 1க்கு நூற்றுக்கு முறைமையான வட்டியும் கோட்டுச் செலவு ரூ 161/77ம் கோட்டுச் செலவில் எதிரி இறுத்த ரூபா 75 கழித்து மிகுதியும்.

வேறு விபரம் அறிய விரும்புவோர் வழக்காளியின் பிறக்ரர் தின்னவேலி மெஸ், ஆர். சிவசுப்பிரமணியம் அவர்களிடம் அறிந்துகொள்ளவும்.

பெ. முத்துத்தம்பி
கமிஷனர்.
சுதுமலை தெற்கு
மானிப்பால், 1-11-57.
M, 153 8-11-

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. MB 1157

குருநாதர் மாணிக்கமும் பெண் நீலாச்சியம்மாவும்.
கந்தர்மடம் யாழ்ப்பாணம்
வழக்காளிகள்

எதிர்

1. சங்கரப்பிள்ளை கந்தர் நடராசா
2. ,, ,, பொன்னுச்சாமி
3. ,, ,, சின்னத்துரை

எல்லோரும் வண்கிழக்கு யாட்பாணம்.
எதிராளி.

யாழ்ப்பாணம் பெரியகோட்டின் MB 1157ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1957 ஹு மார்கழி மீ 18 உ புதன்கிழமை பிற்பகல் 4-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை ரூபா 2935/-. ரூபா 2656 க்கு 15-8-56 துவக்கம் 2-7-57 வரைக்கும் ஐந்து வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் பணம் கொடுக்கும் வரைக்கும் கோட்டு வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 270/82.

### காணி விபரம்

யாழ்ப்பாணம் வண் கிழக்கில் "ஊமை வயலும் தாளை மடையும் என்னும் காணி நீ. இ. $6\frac{3}{4}$ ஆனல் K. கந்தையா உலாந்தா 1936-ம் ஆண்டு தைமாசம் 30-ம் திகதி அளந்துகண்ட படத்தின்படி நீ. இ, 7 குளி 5 கல்வீடும் கிணறும் வான் பயிர் செய்பயிர்களும். எல்லை கிழக்கு செல்லப்பாபெண் செல்லம்மாவின் ஆதனமும் கை ஒழுங்கையும், வடக்கு கவுன்மேந்து ரேயில்வேய்குரிய ஆதனம், (C.G.R.) கார்த்திகேசும் பெண்ணின் ஆதனமும், மேற்கு கார்த்திகேசு நடராசாவும் பெண்ணின் ஆதனமும் மறுவும், தெற்கு வாய்க்கால்,

வ, அ. துரையப்பா
கொமிஷனர்
யாழ்ப்பாணம்
2-11-57.
M 148, 8-11-57,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

காலஞ்சென்ற சரவணை நாகேந்திரர் வேலாயுதபிள்ளை பெண் விசாலாட்சியின் ஆதனங்களின் தத்துவம்.

இறங்கவர்

தத்துவ வழக்கு
இல. 249. T.

சரவணை நாகேந்திரர் வேலாயுதபிள்ளை
— தத்துவகாரன்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் தத்துவ வழக்கு இல. 249 Tல் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1957ம் ஹு மார்கழி மீ 7ம் திகதி சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று சரவணையிறை "இடிப்பன் பெரிய இடிப்பன் பர. நீ. இல 20 இருபது பனைகளும் எல்லை கிழக்கு முருகேசர் நாகலிங்கததிற்குரிய வாதனமும் கேணியும். வடக்கு முருகேசர் நாகலிங்கத்துக்குரிய வாதனமும். சின்லதுரை பெண் தவநிதியம்மாவிற்கும் மறுபேருக்கு முரிய வாதனமும், மேற்கு தெய்விடப் பிறைக் கந்தசாமி கோவில் தெற்கு தெய்விடப் பிறை முருகமூர்த்தி கோவிலும் சின்னத்தம்பி பசுபதிக்குரிய வாதனமும், இதடங்கலும்.

1957-ம் ஹு ஐப்பசி மீ 29 உ

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்,
காரைநகர்.
M. 154 8-11-57.

## இனப் பிரிவினை நீக்குதற்கு 'சிரியா'வின் முயற்சி

—O—

தென் ஆபிரிக்காவில் நடைபெறும் இனப் பிரிவினைக் கொள்கையை மாற்றி அமைக்க முயலும்பொருட்டு நோபல் பரிசு பெற்ற மூவரை அங்கு அனுப்ப வேண்டுமென்று ஐக்கிய நாட்டுச் சபையைச் சிரியா கேட்டுக்கொண்டது. ஸ்ரீ வெல்டர் பியர்சன் கனடா) கலாநிதி அல்பெர்ட் சுவெட்சர் (பிரான்சு) ஸ்ரீ இரால்ப் பஞ்சு (அமெரிககா) ஆகியோர் இத்தொடர்பிற் குறிப்பிடப்பட்டனர்.

## கேள்விப்பத்திர அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாநகரசபை

சந்தைகளின் குத்தகை 1957

மேற்படி சந்தைகளுக்கான கேள்விப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ளும் நாள், 1957 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4-30 மணிவரை இத்தால் நீடிக்கப்படுகின்றது.

கட்சன் செல்வராசா,
மாநகரசபை கொமிஷனருக்காக.
—இ—
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்
1-11-57.
G. 12 8-11-57.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. MB/1563.

நன்னித்தம்பி பொன்னையா சண்டிலிப்பாய்
தற்போது கொழும்பு.
வழக்காளி.

எதிர்

N, S. சேதுராசா கைம்பெண் நாகமுத்து தத்துவகாறி. காலம் சென்ற N S. சேதுராசாவின் 1035 தத்துவ வழக்கில். பெரிய கடை யாட்பாணம்.

— எதிராளி.

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் MB/1563-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1957-ம் ஹு மார்கழிமீ 14-ம் உ சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபாய் 2893/32-ம். 29-3-57 துவக்கம் 4-10-57 வரைக்கும் ரூபாய் 2000/- க்கு நாலு வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் ஐந்து வீதவட்டி பணம் கொடுக்கும்வரை கோட்டுச்செலவும்,

### காணி விபரம்

யாட்பாணம் வண் தென்கிழக்கில் "புங்குமுற உப்பு குளம் தரை" என்னும் காணி J. D. வீரசிங்கம் உலாந்தா 19 6 ம் ஆண்டு ஆடி மாசம் 7ந் திகதி வரைந்த படத்தின்படி நீ. இ. 1 குளி $1\frac{1}{4}$ பயிர்களும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும்.

எல்லை கிழக்கும் தெற்கும் மணிக்கூட்டு ரேட்டும் சன்லி ரேட்டும்.

மேற்கு நாகலிங்கம் செட்டி சண்முகம்செட்டி சேதுருசாவின் ஆதனம்.

வடக்கு காசிநாதர் கணபதிப்பிள்ளையின் உருத்தாளரின் ஆதனமும் K. S. பொன்னம்பலமும் வயித்தீசுவர கோவிலுக்குரிய ஆதனமும்.

வ. அ. துரையப்பா,
கொம்மிஷனர்.
யாழ்ப்பாணம்,
2-11-57.
M 149 8-11-


யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்


கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்
S. கனகசபை
Std 14 சிறுப்பர்


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்




யாழ்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும்திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையாஅவர்களால் 8-11-5[?] வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org